සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
*All Rights Reserved*

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department Of Education – Western Province

**දෙවන වාර ඇගයීම**
**இரண்டாம் தவணை பரீட்சை - 2018**
**Second Term Evaluation**

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade : 09 | විෂයය / பாடம் / Subject : கணிதம் | පත්‍රය / வினாத்தாள் / Paper : I , II | කාලය / காலம் / Time : 02 மணி |

**பெயர் :-.................................................................** **சுட்டெண் :- ......................**

## பகுதி I

- **1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுக்கு படிமுறைகளுடன் இத்தாளிலேயே விடை எழுதவும்.**
- **ஓவ்வொரு வினாவின் சரியான விடைக்கும் 2 புள்ளிகள் வழங்கப்படும்.**


**01.** பொது உறுப்பு $T_n = 5n - 8$ ஆகவுள்ள தொடரின் 7வது உறுப்பு யாது?

**02.** சுருக்கி எழுதுக. $1101_{இரண்டு} + 1010_{இரண்டு}$

**03.** ரூபா 600 பெறுமதியான சேட் ஒன்றை விற்பனை செய்யும் போது ரூபா 30 கழிவு கொடுக்கப்பட்டால் கழிவு சதவீதம் யாது?

**04.** சுருக்கி எழுதுக. $1\frac{1}{5}$ இன் $\frac{2}{3}$

**05.** $x$ இன் பருமன் யாது?




**06.** கூடுகளில் பொருத்தமான எண்களை எழுதுக. $(x-3)(x+5) = x^2 + \square\, x - \square$

**07.** சீரான கதியில் செல்லும் வாகனம் ஒன்று மூன்று மணி நேரத்தில் 210 km செல்லுமாயின் அது 5 மணி நேரத்தில் செல்லும் தூரம் யாது?

**08.** சுருக்கி எழுதுக. $(3x^5)^2$


**09.** $\frac{3}{4}$ இனை சதவீதமாக்குவதற்கு மாணவரொருவர் பாடப்புத்தகத்தில் உள்ளவாறு விஞ்ஞானக் கணிகருவியைப் பயன்படுத்திய விதம் தரப்பட்டுள்ளது. அதற்கேற்ப வெற்றுக்கூடுகளை நிரப்புக.

ON → 3 → ÷ → 4 → [ ] → = (%) → [ ] → 75



kalvi.lk

**10.** உருவில் AB , CD சமாந்தரமாகவும் $K\hat{L}M = 60^0$ , $L\hat{K}M = 50^0$ ஆகவும் காணப்படுகின்றது. $D\hat{K}M$ இன் பெறுமானம் யாது?




**11.** விஞ்ஞானமுறையில் உள்ள பின்வரும் எண்களை சாதாரண முறையில் எழுதுக.

**(i)** $7.871 \times 10^2$ = ................................ **(ii)** $7.871 \times 10^{-2}$ = .............................

**12.** y = m$x$ + c என்னும் சூத்திரத்தில் $x$ இனை எழுவாயாக மாற்றுக.


**13.** 35 cm ஆரையுள்ள ஒரு சில்லு சமதரையில் ஒரு தடவை சுழலும் போது செல்லும் தூரம் யாது?

**14.** கிட்டிய 10 இற்கு மட்டம் தட்டிய ஓர் எண் 60 ஆகும். அவ் எண்ணின் அதிகுறைந்த, அதி கூடிய பெறுமானம் யாது?

**15.** நீளம் 30 cm , அகலம் 20 cm , உயரம் 15 cm உடைய கனவுரு வடிவப் பாத்திரம் கொள்ளக்கூடிய நீரின் அளவை மில்லி லீற்றரில் தருக.

**16.** p = 4 ද q $= -\frac{1}{3}$ எனில் 5p – 9q இன் பெறுமானம் யாது?

**17.** உருவில் உள்ள தரவுகளின்படி $x$ இன் பெறுமதி யாது?




**18.** வட்டமொன்றின் ஆரை 6.74 cm ஆகும்.

**(i)** இதனை முதலாம் தசம இலக்கத்தில் எழுதுக.

**(ii)** கிட்டிய முழு எண்ணில் எழுதுக.

**19.** a + b = 180° , b + c = 180° எனத் தரப்பட்டால் வெளிப்படை உண்மைகளின் அடிப்படையில் நீர் எடுக்கும் முடிவு யாது?

**20.** காரணி பற்றிய அறிவைப் பயன்படுத்தி பெறுமதி காண்க.

$99^2 - 1$



kalvi.lk

**தரம் 9- கணிதம் - பகுதி II**

- **முதலாம் வினாவிற்கும் மேலும் 4 வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **முதலாம் வினாவிற்கு 16 புள்ளிகளும் ஏனைய வினாக்களுக்கு 11 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.**

**01.** உம்மால் வகுப்பறையில் மேற்கொள்ளப்பட்ட " ஒழுக்குகளும் அமைப்புகளும் " என்னும் பாட அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**(a)** **(i)** ஒழுக்கு என்பதன் விளக்கத்தை இலகுவான முறையில் தருக.

**(ii)** அப்பாடத்தில் நீர் கற்ற அடிப்படை ஒழுக்குகள் எத்தனை ?

**(iii)** நீர் கற்ற ஒழுக்குகளில் ஒன்றைப் பற்றி சுருக்கமாக எழுதுக.

**(iv)** உம்மால் (iii) இல் விளக்கமளிக்கப்பட்ட ஒழுக்கை பிரயோகிக்க வகுப்பறையில் நீர் மேற்கொண்ட செயற்பாட்டை விளக்குக.

**(b)** **(i)** கூர்ங்கோண முக்கோணி ஒன்றை வரைந்து அதனை ABC எனப் பெயரிடுக.

**(ii)** AB என்னும் கோட்டின் செங்குத்து இருசமவெட்டியை வரைக.

**(iii)** A யிலிருந்து BC க்கு செங்குத்து வரைக.

**(c)** **(i)** 6cm நீளமான நேர்கோட்டுத் துண்டம் ஒன்று வரைந்து PQ எனப் பெயரிடுக.

**(ii)** PQ ஐ ஒரு புயமாகவும் Q ஐ உச்சியாகவும் கொண்டு $60^\circ$ கோணம் அமைத்து அதனை $P\hat{Q}R$ எனப் பெயரிடுக.

**(iii)** கோணம் $P\hat{Q}R$ இன் இருசமகூறாக்கியை வரைக.

**02.** **(a)** **(i)** பின்வரும் சமவலு விகிதத்தில் வெற்றிடத்தை நிரப்புக.

$$3 : 5 = \underline{\quad\quad} : 30$$

$$10 : \underline{\quad} = 80 : 24$$

**(ii)** குளிர்பானம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் 8 நிமிடத்தில் 160 போத்தல்கள் நிரப்பப்பட்டால் 5 நிமிடங்களில் நிரப்பப்படும் போத்தல்களின் எண்ணிக்கையை விகிதசம முறையில் காண்க.

**(b)** வியாபாரி ஒருவர் அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமானம் ரூபா 160 ஆக இருக்கும் போது 90 டொலர் பெறுமதியான மின்சார உபகரணம் ஒன்றை இறக்குமதி செய்கின்றார்.

**(i)** மின் உபகரணத்தின் பெறுமதியை இலங்கை ரூபாவில் தருக.

**(ii)** வியாபாரி 20% இலாபம் வைத்து விலை குறித்தார். குறித்த விலை யாது?

**(iii)** விற்பனையின் போது 5 % கழிவு கொடுத்தால் கழிவின் பெறுமானம் யாது?

**03.** **(a)** பின்வரும் சமன்பாடுகளைத் தீர்க்க.

**(i)** $\frac{2x}{3} + \frac{x}{2} = 21$ **(ii)** $3\{2(x+1)-1\} = 9$

**(b)** பின்வரும் ஒருங்கமை சமன்பாடுகளைத் தீர்த்து a , b யின் பெறுமானம் காண்க.

$$2a + b = 13$$

$$3a - b = 12$$



kalvi.lk

**04.** **(a)** $y = -2x + 3$ என்னும் நேர்கோட்டை வரைவதற்கு பூரணப்படுத்தப்படாத அட்டவணை ஒன்று தரப்பட்டுள்ளது.

| $x$ | $-1$ | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|
| $y$ | ......... | 3 | 1 | $-1$ | $-3$ | ......... |

**(i)** படிமுறைகளைக் காட்டி அட்டவணையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.


**(ii)** ஆள்கூற்றுத் தளமொன்றில், அட்டவணையிலுள்ள புள்ளிகளைக் குறித்து இணைப்பதன் மூலம் நேர்கோடு ஒன்றை வரைக.

**(iii)** இக்கோட்டிற்கு சமாந்தரமாக உற்பத்தியூடு செல்லும் கோட்டின் சமன்பாட்டை எழுதுக.

**(b)** **(i)** $3x + 2y = 6$ என்னும் நேர்கோட்டை வரையாது அதன் படித்திறன், வெட்டுத்துண்டு ஆகியவற்றை எழுதுக.

**(ii)** $3x + 2y = 6$ என்னும் நேர்கோடானது $x$ அச்சு, $y$ அச்சு என்பவற்றை வெட்டும் புள்ளியின் ஆள்கூறுகளை எழுதுக.

**05.** பூங்கா ஒன்றில் உள்ள முக்கோண வடிவும் அரைவட்ட வடிவும் இணைந்த பூப்பாத்தி ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளது.




**(i)** அரைவட்டப் பகுதியின் ஆரை யாது?


**(ii)** வில் BCD யின் நீளம் யாது?

**(iii)** AD யின் நீளம் யாது?

**(iv)** பூப்பாத்தியின் சுற்றளவு யாது?

**(v)** பூப்பாத்தியை சுற்றி பாதுகாப்பு வேலி இடவேண்டி உள்ளது. அவ் வேலியில் 50 cm இடைவெளியில் நட வேண்டிய மரத்தூண்களின் எண்ணிக்கை யாது?

**06.** **(a)** முக்கோணி ABC யில் AC யானது D வரை நீட்டப்பட்டுள்ளது. C யினூடாக AB க்கு சமாந்தரமாக CE வரையப்பட்டுள்ளது.





**(i)** $A\hat{B}C$ இற்கு சமமான கோணத்தைப் பெயரிட்டு, அதற்கான காரணத்தையும் எழுதுக.

**(ii)** $B\hat{A}C$ இற்கு சமமான கோணத்தைப் பெயரிட்டு, அதற்கான காரணத்தையும் எழுதுக.

**(iii)** வெளிப்படை உண்மையின் அடிப்படையில் $A\hat{B}C + B\hat{A}C = B\hat{C}D$ எனக் காட்டுக.

**(iv)** (iii) இல் பெறப்பட்ட தொடர்பை தேற்றமாக சொற்களில் எழுதுக.

**(b)** உருவில் உள்ள தரவுகளின் படி $x, y, z$ இன் பெறுமதி யாது?




**07.** **(a)** சுட்டி விதிகளின் படி சுருக்குக.

**(i)** $\frac{4x^3 \times 3x^2}{6x^5}$ **(ii)** $\frac{(a^3)^{-2} \times a^4}{(a^{-2})^2}$

**(b)** பெறுமதி காண்க.

**(i)** $3^{-2} + \frac{1}{3}$ **(ii)** $3.5 \times 10^2 \times 2 \times 10^2$



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான
மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில
மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.*

*அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...*

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

**Whatsapp
075 287 1457**